# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No. 91/2017 |
| Deposition Of Witness for | Prosecution PW 6<br>Defense<br>Court |
| Name | திரு. பெருமாள் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2025 |

2ம் எதிரி ஆஜர். மற்ற எதிரி ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 23rd day of May 2025.

நான் நாச்சான்குளத்தில் வசித்து வருகிறேன். கூலி வேலை பார்த்து வருகிறேன். காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான் அந்த கையெழுத்து **அ.சா.ஆ.2** ஆகும். தேதி மாதம் ஞாபகமில்லை சுமார் 6 வருடங்களுக்கு முன்பாக முத்துகிருஷ்ணன், சரவணன் ஆகியோரிடையே சண்டை நடந்தது. அப்போது நான் சம்பவயிடத்தில் இல்லை. சம்பவம் முடிந்தபிறகு நான் சம்பவயிடத்திற்கு வந்தேன் அப்போது போலிஸார் வந்து சம்பவம் இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தார்கள். அதில் நான் கையெழுத்து செய்தேன். கையெழுத்து செய்தபோது மாலை நேரம். சரவணன் வீட்டிற்கு நேர் எதிரே உள்ள இடத்தில் வைத்து கையெழுத்து செய்தேன். வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**எதிரி குறுக்கு விசாரணை**

அ.சா.1 எனது தம்பி ஆவார். நான் கையெழுத்து செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சம்பவயிடத்திற்கு போவதற்கு முன்போ ஒரு தாளில் எழுதிவைத்திருந்தார்கள் அதில் நான் கையெழுத்து செய்தேன். அப்போது

முத்துகிருஷ்ணன் இருந்தார் என்றால் சரிதான். முத்துகிருஷ்ணன் கையெழுத்து போட சொன்னார் என்றும் பிரச்சனை ஏற்படாது என கூறினார் என்றால் கூறவில்லை. பார்வை மகஜர் என் முன்னிலையில் தயார் செய்யப்படவில்லை என்றும், காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன் என்று சொன்னால் சரியல்ல.